செ.வெ.எண்: 01 நாள்:01.12.2017

# பத்திரிக்கை செய்தி

**பெண்கள் பணிபுரியும் இடங்களில் ‘உள்ளக புகார் குழு’**

கரூர் மாவட்டத்தில் பணிபுரியும் இடங்களில் மகளிருக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் (தடுத்தல், தடை மற்றும் தீர்வு) செப்டம்பர் 2013–ன் படி, மாவட்ட அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மகளிர் பணிபுரியும் அனைத்து அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தலைமை ஊழியர், மூத்த நிலையிலான ஒரு பெண் ஊழியர், ஊழியர்களிடையேயிருந்து இரண்டு பேருக்கு குறையாத உறுப்பினர்கள், அரசு சாரா அமைப்பு அல்லது சங்கங்களிலிருந்து ஒரு உறுப்பினர் கொண்ட உள்ளக புகார் குழு அமைத்து குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் விபரம் மற்றும் அவர்களது தொலைபேசி எண் ஆகியவற்றை உடனடியாக கரூர் மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். கூடுதல் விபரம் அறிய கரூர் மாவட்ட சமூகநல அலுவலக தொலைபேசி எண்.04324– 255009 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் எனவும், பணிபுரியும் இடங்களில் மகளிருக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் குறித்து 1091 என்ற இலவச தொலைபேசி எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**